# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் யூ (ஊபீயு:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 13.01.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பண்பாட்டு மையம் சார்பில் 11.01.2019-அன்று பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழக மேலாண்மை புல முதன்மையர் மற்றும் நிதி அலுவலர்( பொ) பேராசிரியர் வி. பாலச்சந்திரன் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று சிறப்பித்தார்.




இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தகைசால் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, கலைமாமணி முனைவர் கு.ஞானசம்பந்தன், அவர்கள் “தரணி போற்றும் தமிழர் திருநாள்” எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். அவர் தம் உரையில் தமிழர்கள் கொண்டாடும் தைப் பொங்கல் திருநாள் ஐம்பூதங்களுக்கும் வணக்கம் செலுத்தும் ஒரு நன்னாளாகும். உலகில் மனிதர்கள் உயிர்வாழ உதவும் சூரியன் உள்ளிட்ட ஐம்பெரும்பூதங்களுக்கும் நன்றிக் கடன் செலுத்தும் முகமாகப் பொங்கல் விழா அமைந்துள்ளது. இப்பொங்கல் திருநாள் மனமாசுகளைப் போக்கும் போகிப் பண்டிகை (போக்கி), உணவு கொடுக்கும் உழவர்களைப் போற்றும் உழவர் திருநாள், உழவுக்கு உறுதுணையாக இருக்கும் காளைகளைப் போற்றும் மாட்டுப்பொங்கல், உலகப் பொதுமறையைத் தந்த வள்ளுவரின் நினைவாக மக்கள் அனைவரும் ஒன்று கூடும் கானும் பொங்கல் என்னும் திருவள்ளுவர் திருநாள் என நாம் கொண்டாடும் அனைத்து விழாக்களும் தமிழர்களின் பண்பாட்டைப் பாரம்பரியத்தைப் பறைசாற்றுகின்றது என்று எடுத்துரைத்தார்.

இவ்விழாவிற்குக் தமிழ்ப் பண்பாட்டுமைய இயக்குநர் பேராசிரியர் சே. செந்தமிழ்ப்பாவை வரவேற்புரை நல்கினார். உதவிப்பேராசிரியர் கா.கணநாதன் நன்றியுரை வழங்கினார். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்